இதயச்சந்திரன்

**ஜீஎஸ்.பீ பிளசை மீட்டெடுக்க பிரசல்சில் குவியும் சிங்களத் தரப்பும், அமெரிக்காவின் போர்க்குற்ற விசாரணை முன்னெடுப்புகளை முறியடிக்க ஓடிச்செல்லும் பேயாசிரியர் ஜீஎஸ்.பீரிசும், வெற்றிக் கேடயத்தோடு மகிந்தரைச் சந்திப்பார்களாவென்பதைப் பொறுத்திருந்து பார்க்கவேண்டும். ஆனாலும் தமிழின அழிப்பு வரலாற்றுச் சான்றுகளை, உலகின்முன்வைத்து, சர்வதேச அரங்கிலிருந்து சிங்களத்தைத் தனிமைப்படுத்தும் வல்லமை, புலம்பெயர் ஈழத்தமிழர் கைகளில் மட்டுமே உள்ளது.**

# சிங்களத்தின் தமிழின அழித்தொழிப்பை அம்பலப்படுத்துவோம்

இன அழித்தொழிப்பானது (genocide) காலனித்துவ காலத்திலிருந்து நடைபெற்று வருகின்றது. `அரசியல், சமூக, சமய, பொருளாதார நிலைமைகள் தொடர்பில், போத்துக்கீசர் ஒரு பாரிய அழிவையே ஒட்டுமொத்தத்தில் இலங்கைத் தமிழர்களுக்குப் பரிசாக விட்டுச்சென்றிருக்கிறார்கள் என்பதே வரலாற்று உண்மையாகும்' என இலங்கையில் தமிழர் – ஒரு முழுமையான வரலாறு என்கிற தனது நூலில் கலாநிதி, முருகர். குணசிங்கம் குறிப்பிடுகின்றார்.

இதன் தொடர் நிகழ்வாக, பிரித்தானியாவிடமிருந்து சுதந்திரம் அடைந்த காலம் முதல், திட்டமிட்ட சிங்களக் குடியேற்றம் என்கிற தமிழர் நில ஆக்கிரமிப்புக்களும், 1956, 1958 இல் ஆரம்பிக்கப்பட்ட இனப்படுகொலைகளும் முள்ளிவாய்க்கால்வரை விரிவடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் மீது போர் தொடுத்து, இலட்சக்கணக்கான தமிழ் மக்களை வன்னியை நோக்கி இடம்பெயர வைத்ததும், முள்ளிவாய்க்காலிற்குள் முடக்கி, சர்வதேச அமைப்புக்களின் கண்டனங்களைச் செவிமடுக்காது இனப்படுகொலை புரிந்து, அங்கிருந்து வெளியேறிய மக்களை வவுனியா வதை முகாம்களுக்குள் அடைத்து வைத்துள்ளது சிங்களப் பேரினவாதம்.

இதனை, பொஸ்னிய பாசையில், இனச்சுத்திகரிப்பென்று அனைத்துலகம் கூறலாம். அதேவேளை இனச்சுத்திகரிப்பு என்கிற குற்றச்சாட்டினை முன்வைத்து, சர்வதேச குற்றவியல் நீதிமன்றம் வழங்கிய தீர்ப்பினை சூடான் அதிபர் அல்பசீர் அசட்டை செய்யவில்லை.

அவர் அதிபராகப் பதவியேற்கும் வைபவத்தில் கலந்துகொண்டு சிறப்பிக்க, பல ஆபிரிக்க நாட்டுத் தலைவர்களும் சூடானிற்கு வருகை தருகிறார்கள்.

இனச் சுத்திகரிப்பு, போர்க்குற்றங்கள், மனிதஉரிமை மீறல்கள் போன்ற சொல்லாடல்கள் யாவும், இன அழித்தொழிப்பின் பக்கப் பரிமாணங்கள்தான் என்பதை, அனைத்துலகமும் புரிந்துகொள்ளும்.

இன அழித்தொழிப்பின் இன்னுமொரு கொடூரமான வடிவமே.

அதே போன்று, வன்னி மீது மிலேட்சத்தனமான ஆக்கிரமிப்புப் போரினை முன்னெடுத்து, மூன்று இலட்சத்திற்கும் மேற்பட்ட வன்னி மக்களை, புதுமாத்தளன்,



ஈழத் தமிழினத்தைப் பொறுத்தவரை, அவர்களின் பூர்வீக நிலங்களை சிங்களமயமாவதால், வாழ்வாதாரங்கள் வேரோடு பிடுங்கி எறியப்படுகிறது. தனிச்சிங்களச் சட்டம், கல்வியில் தரப்படுத்தல், ஆலயங்களை அழித்தல், வரலாற்றினை திரிபுபடுத்தி தொன்மைச் சான்றுகளை மூடி மறைத்தல், இயல்பு வாழ்வினை சீர்குலைக்கும் வகையில் பாதுகாப்பின்மையைப் பேணுதல் போன்றவற்றை சிங்கள மேலாதிக்கம், தொடர்ச்சியாக மேற்கொண்டு வருகிறது.

இன அழிவென்பது வெறுமனே படுகொலைகளோடு மட்டும் தொடர்புகொண்ட விவகாரமென்று கருதுவோமானால், சிங்களத்தின் மீதான அனைத்துலகின் பார்வையோடு நாமும் ஒத்துப்போவது போலாகிவிடும்.

நடைபெற்ற போர்க்குற்றங்களுக்கான விசாரணைகளை நடாத்திவிட்டால், நாட்டில் தேசிய நல்லிணக்கம் உருவாகிவிடுமென்பதே அமெரிக்க இராஜாங்க திணைக்களப் பேச்சாளர் பி.ஜே. கிரவ்லியின் வாதம்.

ஆனாலும் இருநாடுகளுக்கிடையிலுள்ள நட்புறவா அல்லது இலங்கையில் நடைபெற்ற மனித உரிமை மீறலா முக்கியமானது என்று, அமெரிக்காவிற்கு சவால் விடுகிறார் இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜீ.எல்.பீரிஸ்.

இவர் பேராசிரியரா அல்லது பேய் ஆசிரியரா என்கிற கேள்வி, அண்மையில் வெளிவந்த காணொளிக் காட்சிகளை கண்ணுற்ற தமிழ் மக்களிடமிருந்து எழுகின்றது.

இவைதவிர நடைபெற்ற போர்க்குற்றங்களுக்கு, விசாரணை நடாத்தப்பட வேண்டுமென்பதில் உறுதியாகவிருக்கும் அனைத்துலக நெருக்கடிக் குழுவின் (International Crisis Group) புதிய தலைவரும், ஐ.நா சபையின் முன்னாள் மனிதஉரிமை ஆணையகத்தின் தலைமைப் பொறுப்பாளருமாகிய லூயிஸ் ஆபர் அம்மையார் அவர்கள், 2009 இல் இலங்கையில் நடந்த உள்நாட்டு யுத்தத்தில், ஐ.நா.வின் நடத்தை குறித்து உள்ளக ரீதியில் மீளாய்வு செய்யப்படவேண்டுமென வலியுறுத்துகின்றார்.

அதேவேளை டப்ளினில் நடைபெற்ற 'நிரந்தர மக்கள் நீதிமன்ற' விசாரணைகளில் குறிப்பிடப்பட்ட விடயங்களையும் நாம் கவனத்தில்கொள்ள வேண்டும்.

2002 பெப்ரவரியில் மேற்குலகால் உருவாக்கப்பட்ட போர்நிறுத்த உடன்படிக்கையைச் செயலிழக்கச் செய்யும் வகையில், விடுதலைப் புலிகளை பயங்கரவாத இயக்கப் பட்டியலில் ஐரோப்பிய ஒன்றியம், 2006 இல் இணைத்த விவகாரம், இந்த நீதிமன்றத்தில் (The Permanent Peoples Tribunal on Srilanka) சுட்டிக்காட்டப்பட்டது.

இதனை வேறொரு வகையில், ஐ.நா சபைவெளியிட்ட 'நோக்கமும் வடிவமும்' என்ற தலைப்பில் அமைந்த ஊடக அறிக்கையிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

அதாவது போர்நிறுத்த ஒப்பந்தம் தோல்வியடைந்ததன் உண்மைக் காரணிகளையும், சூழ்நிலைகளையும் கண்டறிவதோடு, மே 19, 2009 வரை நிகழ்ந்த சம்பவங்களையும் கவனத்தில்கொள்ள வேண்டுமென அவ்வறிக்கையில் தெளிவாக முன்வைக்கப்பட்டுள்ளது.

ஆனாலும் இறுதிப்போர் நடந்த காலத்தில், ஐநா. சபை கடைப்பிடித்த, நழுவல் போக்கு குறித்த குற்றச் சாட்டுக்களை நிராகரிக்கும் பொதுச் செயலாளர் பான் கீ மூன் அவர்கள், தமது முன்னைய ஊடக அறிக்கையூடாக எதனைக் கூற முற்பட்டாரென்பதை புரிந்துகொள்ள முடியாதுள்ளது.

மேற்குலகின், வெளியுறவுக் கொள்கை வகுக்கும் சக்திகளிடையே, பெரும் செல்வாக்கைச் செலுத்தும் அனைத்துலக நெருக்கடிக் குழு என்கிற 'சிந்தனை மையம்' விடுத்த அறிக்கையே, பான் கீ மூனின் தடுமாற்ற அறிக்கைகளுக்கு அடிப்படையாக அமைந்துள்ளதென தெளிவாக உணர்ந்து கொள்ளலாம்.

நிபுணர்குழு அமைக்கும் விவகாரத்திலிருந்து பான் கீ மூன் விலகிச் செல்லக் கூடாதென்று, நியூயோர்க்கைத் தளமாகக் கொண்டியங்கும் மனித உரிமைக் கண்காணிப்பகம் விடுத்த இறுக்கமான செய்தியும், பொதுச் செயலாளரின் மீது மேலதிக அழுத்தங்களை பிரயோகிக்கிறது.

ஆகவே ஜீ.எஸ்.பீ பிளசை மீட்டெடுக்க பிரசல்சில் குவியும் சிங்களத் தரப்பும், அமெரிக்காவின் போர்குற்ற விசாரணை முன்னெடுப்புகளை முறியடிக்க ஓடிச்செல்லும் பேயாசிரியர் ஜீ.எஸ்.பீரிசும், வெற்றிக் கேடயத்தோடு மகிந்தரைச் சந்திப்பார்களாவென்பதை பொறுத்திருந்து பார்க்கவேண்டும்.

ஆனாலும் தமிழின அழிப்பு வரலாற்றுச் சான்றுகளை, உலகின்முன்வைத்து, சர்வதேச அரங்கிலிருந்து சிங்களத்தைத் தனிமைப்படுத்தும் வல்லமை, புலம்பெயர் ஈழத் தமிழர் கைகளில் மட்டுமே உள்ளது.